அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார்
# சன்மார்க்க ஞானமுரசு

பிலவ வருடம் மாசி-பங்குனி மார்ச் 2022 முரசு 15 ஒலி 172



பிரதி ஒன்றுக்கு ரூ.10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சி

# அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை

ந ட த் து ம்



# பஞ்ச சுத்தி கிரியா



## 2022 மார்ச்
## 25,26,27
## வெள்ளி, சனி, ஞாயிறு

இ ம் மு கா மி ல்

- **பஞ்ச சுத்தி முறை**
- **யோகாசனம் • பக்தி**
- **பிராணாயமம்**
- **மௌனம் • தியானம்**

போன்றவை நடைபெறும்

சைவ உணவாளர்களுக்கு மட்டுமே அனுமதி
40 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

பயிற்சியில் கலந்து கொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. அன்பர்கள் மார்ச் 24 வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும்
2 பயிற்சியில் கலந்து கொள்வோர் 18 வயதிற்கு மேற்பட்டவாராக இருக்க வேண்டும்.
3. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட், மேலும் ஆண்கள் டீ—ஷர்ட், ஷார்ட்ஸ், பெண்கள்: சுடிதார் போன்ற ஆடைகளை எடுத்து வரவும்.
4. குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்து வரவும்.
5. டார்ச் லைட், காற்று தலையணை, தண்ணீர் பாட்டில் போன்றவை எடுத்து வரவும்.

இடம்: **சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிப்பாளையம் பொள்ளாச்சி


உங்கள் ஆரோக்கியத்திற்கான நன்கொடை ரூ3000

முன்பதிவிற்கு **9894010007**

# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

அன்பு உள்ளங்களே! மனத்தை வேறு எந்தவித ஆபாசத்திலும் செல்லவொட்டாது இறைவனுடைய திருவடியிலேயே நிறுத்த வேண்டும் என்பது பெருமானார் அருளிய கரண ஒழுக்கமாகும். அதன்பொருட்டே இங்கு **அருட்பெருஞ்ஜோதி அகவல்** என்ற பதிகம் அளிக்கப்படுகின்றது. இதை நாளும் ஓதி பரம்பொருளின் திருவடியை நினைந்து உய்வடைவோமாக!

*சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும்*
*அகரமும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி*
*உபரச வேதியின் உபயமும் பரமும்*
*அபரமும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி*
*மந்தணம் இதுஎன மறுஇலா மதியால்*
*அந்தணர் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி*
*எம்புயக் கனிஎன எண்ணுவார் இதய*
*அம்புயத்து அமர்ந்த அருட்பெருஞ்ஜோதி*
*செடியறுத்தே திட தேகமும் போகமும்*
*அடியருக்கே தரும் அருட்பெருஞ்ஜோதி*
*துன்பறுத்து ஒருசிவ துரிய சுகந்தனை*
*அன்பருக்கே தரும் அருட்பெருஞ்ஜோதி*
*பொதுவது சிறப்பது புதியது பழையது என்று*
*அதுவதுவாய்த் திகழ் அருட்பெருஞ்ஜோதி*
*சேதனப் பெருநிலை திகழ்தரும் ஒருபரை*
*ஆதனத்து ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி*
*ஓமயத் திருவுரு உவப்புடன் அளித்தெனக்கு*
*ஆமயத் தடைதவிர் அருட்பெருஞ்ஜோதி*
*எப்படி எண்ணியது என்கருத்து இங்கெனக்கு*
*அப்படி அருளிய அருட்பெருஞ்ஜோதி*
*எத்தகை விழைந்தன என்மனம் இங்குஎனக்கு*
*அத்தகை அருளிய அருட்பெருஞ்ஜோதி*
*இங்குறத் திரிந்து உளம் இளையாவகை எனக்கு*
*அங்கையில் கனியாம் அருட்பெருஞ்ஜோதி*
*பார்உயப் புரிகெனப் பணித்துஎனக்கு அருளிஎன்*
*ஆருயிர்க்குள் ஒளிர் அருட்பெருஞ்ஜோதி. 198*




தங்கள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, அமைதி நிரம்ப ஜோதி வழிபாட்டினை நாள்தோறும் செய்யுங்கள்.

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!**
**கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்குக!**
**வள்ளல் மலரடி வாழ்க! வாழ்க!**

திருச்சிற்றம்பலம்

# திருவருள் முறையீடு

தயவுத்திரு லோக ஆனந்தபாரதி, பெங்களூர்.



வீணே பொழுது கழிக்கின்ற நான் உன்விரைமலர்த்தாள்
காணேன் கண்டாரையும் காண்கின்றிலேன் சற்றும் காணற்குஅன்பும்
பூணேன் தவமும் புரியேன் அறமும் புகல்கின்றிலேன்
நாணேன் விலங்கிழி யாணே யெனுங்கடை நாயினனே. –14

(விரைமலர் – வாசம் வீசும் மலர், அன்பும் பூணேன் – அன்பு உடையவனாய் இல்லை, அறம் – நீதி நிறைந்த அருளாளர்களின் இலக்கியங்கள், நாணேன் – நாணம் (வெட்கம்) இல்லாதவனாய் இருக்கின்றேன்.)

**பாடல் அறிமுகம்:**

*இறைவனின் "திருவருட்சத்தியாகிய" திருவடியை தரிசித்து ஆன்ம அனுபவமும், அருள் உணர்வும் பெறாது வீண் நாள் கழிக்கும் சிறுமையை உணர்ந்து பெருமான் இறைவனிடத்தில் அக்குற்றம் நீங்க முறையிடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.*

**உரை:**

*"இறைவனே! எளியேனாகிய யான் வீணே பொன்போன்ற காலத்தைக் கழிக்கின்றேன் அல்லாமல் உன் மணம் பொருந்திய அழகிய மெல்லிய பூப்போன்ற திருவடியை காண முயற்சி செய்யாது இருக்கின்றேன். அதுமட்டுமா பலவாறாய் முயற்சி செய்து உன் திருவருள் விளங்கப்பெற்ற, திருவடி தரிசனம் கண்ட ஞானிகளையும் காணாமல் இருக்கின்றேன். உன் திருவடியைக் காண உன்னிடத்தில் அன்பும் செய்யவில்லை, அறமாகிய தோத்திரங்களையும் புகலவில்லை. இத்தகைய நான் மேற்கண்ட என் இழிநிலையை நினைத்து வெட்கமும் கொள்ள வில்லை. நாணம் இல்லாத நான் விலங்குகளிலும் கடையவன், நாயினும் இழிந்தவன். எனவே, என் குற்றம் போக்கி திருவருள் செய்" என்று நம் பெருமான் விண்ணப்பிக்கின்றார்.*

**விளக்கம்:**

*"காலம் பொன் போன்றது" என்பது முதுமொழி. "உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்ம லாபத்தை* **காலமுள்ளபோதே** *அறிந்து அடைய வேண்டும்" என்பது நம் பெருமானார் ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் அருளியுள்ளது. காலம் போனால் காலன் (இயமன்) வருவான் என்பதை நாம் உணராது அநித்திய மாயைக்கு ஆட்பட்டு பொழுதைக் கழிக்கிறோம்.*

இடம் தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், பிற உயிர்க்கு இரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப்பணிதல், பத்தி செய்து இருத்தல் முதலிய நற்குண நற்செய்கைகளில் ஈடுபடுவது சன்மார்க்க வாழ்விற்கு உரிய வாழ்வு முறையாகும். இம்முறையில் சாதனம் செய்வது மனிதப் பிறப்பை பெற்றவர்களுக்கு இன்றியமையாத ஒன்று என பெருமானார் அருளியுள்ளார்கள்.

அப்படி அல்லாது மக்களினம் பொழுது போக்கு சாதனங்களில் நாளைப் போக்குவது இறை உணர்வைப் பெறத் தடையாகும். இப்படி அநித்திய மாயப் பொருட்களின்பால் ஒருவரின் கவனம் சென்றால் அவர் இறை உணர்வைப் பெற சிறிதும் முயலமாட்டார். இப்படி இறைவன் திருவருளைப் பெற முயலாத மக்களினத்தின் குற்றத்தை தம் குற்றமாகவே உணர்ந்த வள்ளல் பெருமான் இறைவனிடத்தில், "வீணே பொழுது கழிக்கின்றேன், உன் விரைமலர்த்தாள் காணேன்" என்று முறையிடுகின்றார்.

இறைவனைக் காண அவன் திருவடி தரிசனத்தைப் பெற இயலாத நான் அத்தரிசனத்தைக் கண்டு அனுபவித்த ஞானிகளின்பால் சென்று அவன் திருவடி தரிசனத்தைப் பெறும் வழி எது? என்று தெரிந்து கொள்ளவும் விருப்பம் இல்லாத கடையனாய் இருக்கின்றேன் என்பதை, "கண்டாரையும் காண்கின்றிலேன்" என்று குறிப்பிடுகின்றார்.

ஒரு ஊரின் வழி அறிந்தவரின் ஆலோசனை நமக்கு அந்த ஊரை சரியாக அடைய வழிகாட்டுவதுபோல், இறைவனை அடைந்த ஞானிகளின் வழிகாட்டல் நமக்கு இறைவனை காண்பிக்கும் என்பதை உணர்ந்து சன்மார்க்கமாகிய ஞானவழி செல்ல நாம் முயல வேண்டும் என்பது இங்கு சிந்திக்கத்தக்கது. உயிர்கள் இறைவனை அடைய வழி தெரியாது துன்பப்படும் என்பதை உணர்ந்த அந்நிலை அடைந்த ஞானிகள் உயிர்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக அருளிச் செய்தவையே அருட்பாக்களாகும். அந்நூல்கள் சாத்திரமாகவும், தோத்திரமாகவும் விளங்குகின்றன. இவ்விதம் சாத்திரத்திலும், தோத்திரத்திலும் மிக உயர்ந்து விளங்கும் நூல்கள் இறைவனிடம் ஆன்மாக்கள் இணையவும் அன்பு பெருகவும் உதவுவது என்பதை உணராது அத்தகைய தோத்திரங்களையும் பாடாதவனாக அடியேன் உள்ளேன் என்பதை "அறமும் புகல்கின்றிலேன்" என்று பாடுகின்றார்.

திருவடியை தரிசிக்க எண்ணம் இல்லாத நிலையைப் பற்றி மக்களுக்கு நாணம் எழ வேண்டும் என்பது பற்றி "நாணேன்" என்கின்றார்.

*மக்கட்கு நாணம் பிறவிப் பண்பு. அஃது இல்லையாயின் அவர் மக்களாயினும் விலங்கினமேயாவர். விலங்கினுள்ளும் உயர்நிலையில் வைத்துப் பேணப்படினும் நாயின் இழிப்பண்பு ஒரொருகால் அது இழிச்செயலைச் செய்தே தீரும். அதனால், அது கடைப்பட்ட இனமாகக் கருதப்படுகிறது. அதிலும் விலங்குகளில் இழிந்து கடைப்பட்ட ஆண்நாய் இனத்தவன் என்ற பொருள்பட யானும் நாணமின்றி இருத்தலால் யான், "விலங்கு இழி ஆணே எனும் கடைநாய் இனனே" என பழித்துரைக்கின்றார்.*

*இதனால், திருவடி காணும் முயற்சியும், கண்டாரையேனும் காணும் செய்கையும், அதற்குரிய அன்பும், அவ்வன்புக்கு இன்றியமையாத தவமும் அறமும் மேற்கொள்ளாமல் வீண் பொழுது போக்கியதற்கு நாணமில்லாமல் நாயிற் கடையினமாக குற்றத்தை விரித்துக் கூறி தன்னை அருள் கொண்டு அறிவும் செய்கையும் தரவேண்டுமென முறையிடுவது இத்திருப்பாட்டின் கருத்து. இப்பாடல் நம் பொருட்டு பெருமான் இறைவனிடத்தில் விண்ணப்பிக்கின்றார் என்பது சொல்லித் தெரிய வேண்டுவதில்லை.*

*எனவே, மேற்கண்ட பாசுரத்தில் தெரிவித்த வண்ணம் முயற்சி செய்து திருவடி தரிசனம் கண்டு உய்வடைவோமாக!*

திருச்சிற்றம்பலம்

## தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு...

*திருவண்ணாமலையிலும், பழனியிலும் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமசாலையில் அன்னதானம் செய்யலாம்.* **தங்கள் நன்கொடைகளுக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலுக்கு உண்டு.**

மேலும் விபரங்களுக்கு: +91 9487454688

**ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை**

| | |
|---|---|
| **காலை கஞ்சி வார்த்தல் (தி.மலை/பழனி)** | **–ரூ.1000/–** |
| **காலை சிற்றுண்டி (தினசரி)** | **–ரூ.3,000/–** |
| **" (இனிப்பு மற்றும் வடையுடன்)** | **–ரூ.5,000/–** |
| **மதிய உணவு (தினசரி) (தி.மலை/பழனி)** | **–ரூ.5,000/–** |
| **" (இனிப்பு மற்றும் வடையுடன்)** | **–ரூ.6,000/–** |
| **சிறப்பு மதிய உணவு (தி.மலை)** | **–ரூ.12,000/–** |
| **பசு பராமரிப்பிற்கு (ஒரு நாளைக்கு)** | **–ரூ.3,000/–** |
| **அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) –15லி** | **–ரூ.1,900/–** |



# அகவல் தரும் தகவல்

தயவுதிரு தாமல் கோ. சரவணன் அவர்கள், காஞ்சிபுரம்

இறை என்கிற மெய்ப்பொருளை இந்தப் பூமியில் எவ்வகை மனிதக் கூட்டம் உள்வாங்கி கிரகித்து வெளிப்படுத்தியது என்பது நமக்கு தெரியாது. ஆனால், அந்தக் காலம் தொட்டு இந்தக் காலம் வரையிலும் அந்த இறையை அடைவதற்கும் அதன் அருளைப் பெறுவதற்கும் எண்ணற்ற வழிகளும், மதங்களும், சமயங்களும், மார்க்கங்களும் உண்டாகிவிட்டன. ஒவ்வொரு மதமும் இறைவனின் அருளைப் பெற தத்தமக்குரிய வழிமுறைகளை சொல்கிறது. அவர்களுக்கென்ற வழிபாட்டுத்தலம், வழிபடுபொருள், வழிபாட்டு முறையெல்லாம் கூட உருவாகிவிட்டன. இவையெல்லாம் ஒன்றுக்கொன்று முரணாகவும், வேறுபட்டும் இருப்பதால்தான் மதங்களுக்குள்ளே பூசல்களும், போட்டிகளும் அதிகமாகிவிட்டன. நம் அருளாளர்கள் இறைவனின் இருப்பை அடைய மார்க்கங்களை விரித்துரைத்தார்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று பகுத்துக் கொடுத்தார்கள். சற்புத்திர மார்க்கம், தாசமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்று ஆழப்படுத்தினார்கள். இதனையெல்லாம் சிந்திக்கிறபோது இறைவனை அடையும் பாதை மிகச் சிரமமானதோ என்ற குழப்பத்தையும், பயத்தையும் ஏற்படுத்திவிடுகின்றன.

பொதுவாக, உலகியலில் நமக்கு ஒன்று தேவையென்றால் வேண்டியவரிடம் சென்றுதான் கேட்டுப் பெறவேண்டும். அதற்கானப் பிரயத்தனங்கள் ரொம்பவே அதிகம்தான். நம் வீடு இருக்கும் தெருவின் விளக்கு எரியவில்லை என்றால் வார்டு உறுப்பினரைத் தேடிச் சென்று முறையிட வேண்டும். தொகுத்திக்கான தேவையோ, அடிப்படை வசதியோ வேண்டுமென்றால் சட்டமன்ற உறுப்பினரின் அலுவலகம் சென்று முறையிட வேண்டும். இவ்வளவு ஏன், கடனுக்காக காசுபெற வேண்டும் என்றால்கூட உரியவரிடத்திற்குச் சென்று வேண்டிப் பெற வேண்டும். இப்படியாக அர்ப்பப் பதவிகளில் இருப்பவரிடத்து நமக்கொரு காரியம் ஆகவேண்டும் என்றால் அவர்களிடத்திற்கே சென்று அவர்களுக்கேற்றபடி பேசிக் குலாவித்தான் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியும். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் இந்த சாதாரணப் பதவிகளில் இருப்பவரிடத்து முறையிட்டுப் பெறுவதே குதிரைக் கொம்புக்

கணக்காக இருந்தால் பரம்பொருளாய் பதவி வகிக்கும் அருட்பெருஞ்ஜோதியிடத்து ஒன்றை முறையிட்டுப் பெறுவதென்பது எவ்வளவு கடினமாக இருக்கும்? அதனால்தான் மதங்களும், மார்க்கங்களும் இத்தனை அசௌகரியப்பட்டுக் கொண்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால், பாருங்கள் வள்ளல் பெருமானார் சொல்கிறார் இறைவனின் அருளைப் பெறுவது அவ்வளவு கடினமில்லையாம். “தனிப்பெருங்கருணை” என்று அவனை சொல்கிறோமே அதற்கு என்ன காரணம்?

பொதுவாக கருணை கொண்டவர்களிடம் வந்து ‘ஈது செய்க’ என்று யாரேனும் கேட்டாலே அதை அளிக்கும் பக்குவம் கொண்டவர்களாக இருப்பர். ஆனால், தனிப்பெருங்கருணை இன்னும் உயர்ந்தது. ஆம் யாருக்கு எது வேண்டுமானாலும் இருந்த இடத்திலிருந்தே அவர்களுக்கு அளித்து அருள் செய்யக் கூடிய பேராற்றல் கொண்டதாம்.

**எங்கெங்கு இருந்து உயிர் ஏதெது வேண்டினும்**
**அங்கங்கு இருந்து அருள் அருட்பெருஞ்ஜோதி**

ஒரு புழுவிற்காக மண்ணுக்குள்ளும், ஒரு மீனுக்காக கடலுக்குள்ளும், ஒரு பாம்பிற்காக புவியின் மேலும், பறவைக்காக வான் பரப்பிலும் அவையவையினுக்குள் வேண்டியதை அங்கெல்லாம் சென்று அளித்து அருள் செய்யும் தயவே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் தயவு. எனவேதான்

**எங்கே கருணை இயற்கையின் உள்ளன**
**அங்கே விளங்கிய அருட்பெருஞ்ஜோதி** என்றார் நம் பெருமானார்.

இந்த உலகில் எங்கெல்லாம் கருணை இயல்பாக இருக்கிறதோ அங்கெல்லாம் ஆண்டவன் விளங்குகின்றான். காரணம் கருணையே சிவம். சிவமே கருணை. இதனையே ‘அன்பே சிவம்’ என்றார் திருமூலர். ஆக, கருணை இருக்கும் இடத்திலெல்லாம் சிவம் இருக்கிறது. இருந்தாக வேண்டிய நியதி இருக்கிறது.

இப்படிப்பட்ட உண்மைகளை உள்ளடக்கிய பாசுரங்களாக இருப்பதால் நம் வள்ளல் பெருமானார் அருளிய திருவருட்பா வெறும் தோத்திரப் பாடல்கள் மட்டும் அல்ல. அவை சாத்திரப் பாடல்களாகவும் விளங்குகின்றன என்று ஆன்றோர்களால் சொல்லப்படுகின்றது.

மேலும், ‘கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக மற்றெல்லாம் மருள்நெறி’ என திருவருள் தனக்கு தெரிவித்தது என்று நம் பெருமானார் திருவருட்பாவில் த்தில்

அருளியுள்ளமையால் சாதி, சமய, மத, இன மொழி வேறுபாடு பாராது ஜீவர்களிடத்தில் தயவும், கடவுளிடத்தில் அன்பும் கொண்டு வாழ்ந்தால் அருட்பெருஞ்ஜோதி இறைவன் நாம் இருக்கும் இடத்திற்கே வந்து அருள்செய்வது உறுதி.

அப்படியெனில் மதங்களுக்குள் இறைவனைத் தேடுகின்றவர்களுக்கும், பூஜிப்பவர்களுக்கும் இறைவன் அருள் செய்வதில்லையா என்ற கேள்வி நமக்குள் எழும். இதற்கும் வள்ளல் பெருமானே விடையளிக்கிறார்.

**எம்மதம் எம்இறை என்ப உயிர்த்திரள்**
**அம்மதம் என்றருள் அருட்பெருஞ்ஜோதி**

அதாவது, இந்த உலகத்தில் எல்லா உயிர்களும் எந்த மதத்திலிருந்து அவரவர் கடவுளை வணங்கினாலும் அருட்பெருஞ்ஜோதியே அம்மதக்கடவுளாக நின்று அருள்புரிகின்றதாம். இதனைக் கேட்கும் போதே "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற வாசகம் நினைவிற்கு வருகின்றது. ஆம்! தென்னாடுடைய சிவனாக விளங்கும் அருட்பெருஞ்ஜோதிதான் எந்நாட்டவர்க்கும் கடவுளாக நின்று அருள்பாலிக்கிறார்.

அப்படியிருக்க எந்த மதத்தில் இருந்து இறைவனைத் தொழுதாலும் அவன் அருள்புரிவான் எனில் நாம் ஏதோவொரு மார்க்கத்தைப் பிடித்துக் கொண்டாலே போதும்தானே என்று தோன்றலாம். ஆனால், அதில் ஒரு சூட்சுமம் இருக்கின்றது.

"தென்னாடுடைய சிவனே போற்றி" என்ற வாசகத்தில் தென்னாடு என்பது எது என்று வினவினால் அதற்கு நம் வள்ளல் பெருமானார் திருவருட்பா வசனபாகத்தில் அண்ட பிண்ட திசைகள் என்ற தலைப்பின் கீழ் விடையளிக்கின்றார்.

**பிண்ட திசை:** கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்பவற்றில் தலை தெற்கு. கால் வடக்கு. நெற்றி கிழக்கு, முதுகு மேற்கு. ஆக, தென்னாடு என்பது தலைபாகம். எந்நாட்டவர்க்கும் தெற்கு பாகம் தலைதான். அங்குதான் நடராஜர் திருநடனம் புரிகின்றார் என்பதால்தான் மாணிக்கவாசக சுவாமிகள் "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்றார். இவ்வுண்மையையே ஞானசபையாக வடலூரில் அமைத்தார் நம் பெருமானார்.

மேலும், "சமயமத சாத்திரங்களில் அனேக இடங்களில் பிழைகள் இருக்கின்றன. அதற்குக் காரணம் அவற்றை இயற்றியவர்கள் மாயையின் சம்பந்தத்தை அடைந்திருந்தவர்கள்.

*ஆகையால், முன்னுக்குப்பின் மறைப்புண்டு. தப்புகள் நேரிட்டிருக்கின்றன. மாயையை வென்ற சுத்த ஞானிகளுக்கல்லது மற்றவர்களுக்குப் பிழையற இயற்ற முடியாது. அந்தப் பிழைகள் சுத்த சன்மார்க்கம் விளங்குகின்ற காலத்தில் வெளிப்படும்" என்றும் நம் வள்ளல் பெருமானார் அருளியுள்ளார்கள்.*

*அதோடல்லாமல் பெருமானார் தன்னை எதற்காக இறைவன் இப்பூவுலகிற்கு வருவித்தார் என்பதை,*

**பேருற்ற உலகிலுறு சமயமத நெறிஎலாம்**
**பேய்ப்பிடிப்புற்ற பிச்சுப்பிள்ளை**
**விளையாட்டென உணர்ந்திடாது உயிர்கள்**
**பலபேதமுற்று அங்கும் இங்கும்**
**போருற்று இறந்து வீண்போயினார் இன்னும்**
**வீண்போகாதபடி விரைந்தே**
**புனிதமுறு சுத்த சன்மார்க்க நெறி காட்டி**
**மெய்ப்பொருளினை உணர்த்தி எல்லாம்**
**ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதி**
**நீ என்பிள்ளை ஆதலாலே**
**இவ்வேலை புரிக என்று இட்டனம் மனத்தில்**
**வேறு எண்ணற்க என்ற குருவே**

*என்ற திருவருட்பா பாசுரத்தில் அருளுகின்றார்.*

*இதனின்று நாம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு மிக ஆழமான உண்மை என்னவெனில், ஜீவர்களாகிய நாம் சமயத்தின் பெயரால் போர் செய்து அழிவதைக் கண்டு தாங்கிக்கொள்ள முடியாத அருட்பெருஞ்ஜோதி இறைவன்தான் நம் பெருமானாரை அனுப்பி சுத்த சன்மார்க்க நெறியினை நமக்கு காட்டச் சொல்லியிருக்கின்றார் என்பதாம். ஆக, சுத்த சன்மார்க்கம் என்பது இறைவனே கொடுத்த மார்க்கம் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.*

*உயிர்த்திரள் அத்தனைக்கும் ஆதாரமான பரம்பொருளின் அருளைப் பெறவேண்டுமானால் உயிர்த்திரள் அனைத்தினிடத்தும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையோடு தயவு செலுத்த வேண்டும்.*

*இதனைத்தான் நம் வள்ளல் பெருமானார்,* **"சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய சாதனம் என்னவென்றால் எல்லா ஜீவர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்து அன்பும் முக்கியமானவை. ஆதலால், காலம்**

**தாழ்த்தாது எல்லா உயிர்களையும் தன்னுயிரைப்போல் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சாதனம். இந்தக் குணம் வந்தவன் எவனோ அவன்தான் இறந்தவனை எழுப்புகின்றவன். அவனே ஆண்டவனும் ஆவான்''** *என்று முடித்திருப்பார்.*

**சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே**
**சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே**
**ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்**
**அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே**
**நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான**
**நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருவர் அவர்தாமே**
**வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய**
**மேவுகின்ற தருணம் இது கூவுகின்றேன் உமையே.**

*என்று திருவருட்பாவில் 'உறுதி கூறல்' என்ற தலைப்பின் கீழ் அருளியுள்ளமையால், மனித தேகம் பெற்ற நாம் அனைவரும் நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞானானந்த நடம் புரியும் தனித்தலைவராகிய அருட்பெருஞ்ஜோதி இறைவனின் அருளைப் பெற்று நித்தியமான இன்பத்தை அடைந்து வாழ்வதற்கான பாதை சுத்த சன்மார்க்கம் ஒன்று மட்டுமே என்பதும் அவ்வின்பத்தைப் பெறுவதற்கான ஒரே சாதனம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமையோடு எல்லா உயிர்களையும் தம்முயிராய் பார்த்து அவ்வுயிர்களுக்கு உபகாரம் செய்வதாகிய ஜீவகாருண்ய ஒழுக்கமுமே என்பது முடிபு. இதனுள் எழுகின்ற எல்லாக் கேள்விகளுக்கும் விடை திருவருட்பா பாசுரங்களே. இதனை அனைவரும் மனதில் நிறுத்தி வள்ளல் பெருமான் மூலமாக அருட்பெருஞ்ஜோதி இறைவன் வகுத்துக் கொடுத்த பாதச் சுவட்டில் பயணப்படுவோம்.*

**உலகினில் உயிர்களுக்கு உறும் இடையூறெலாம்**
**விலக நீ அடைந்து விலக்குக மகிழ்க**

**சுத்த சன்மார்க்கச் சுகநிலை பெறுக**
**உத்தமன் ஆகுக ஓங்குக என்றனை.**

ஒன்றே சிவம் அதை ஒன்று சன்மார்க்கமும்
ஒன்றே என்றீர் இங்கு வாரீர்!
நன்றே நின்றீர் இங்கு வாரீர்! – திருவருட்பா

திருச்சிற்றம்பலம்

# மூத்தோர்சொல் அமிர்தம்





ஒருவர் ஒரு முறை தனது உடல்நிலை குறித்து மிகுந்த பயத்துடன் மருத்துவரிடம் சென்றார்.

அவர் மிக்க கவலையுடன், "டாக்டர்! எனது உடல் முழுவதும் வலிக்கிறது. நீங்கள்தான் அதை எப்படியாவது குணப்படுத்த வேண்டும்'' என்று கூறினார்.

மருத்துவர், "எங்கே வலிக்கிறது எப்படி வலிக்கிறதென்று விரிவாகக் கூறுங்கள்'' என்றார்.

வந்தவர், "எனது தோள்பட்டையைத் தொட்டால் வலிக்கிறது, எனது முதுகைத் தொட்டால் வலிக்கிறது, எனது வயிற்றைத் தொட்டால் வலிக்கிறது, எனது காலைத் தொட்டால் வலிக்கிறது, எனது தலையைத் தொட்டால் வலிக்கிறது"... என்று அடுக்கிக் கொண்டே போனார். மருத்துவர் அவரை முழுவதுமாக பரிசோதித்தார்.

பின்னர் அந்த மனிதரிடம், "உங்கள் உடலின் மற்றப் பகுதிகளில் எந்தப் பிரச்சனையுமில்லை. உங்கள் விரல்தான் உடைந்துள்ளது. அதனால்தான் மற்ற பாகங்களைத் தொடும்போது வலிக்கிறது. உங்கள் விரலுக்குக் கட்டுப் போடுகிறேன். இரண்டு வாரங்கள் அதை அசைக்காமலிருந்தால் சரியாகிவிடும்'' என்றார்.

பல சமயம் பிரச்சனை எங்கே இருக்கிறதென்றே நம்மால் சரியாகக் கண்டுபிடிக்க முடிவதில்லை. தவறான புரிதலுடனேயே வாழ்வில் பல அம்சங்களையும் அணுகி, சம்பந்தப்படாத மனிதர்கள் மீதோ காரணங்களின்மீதோ குற்றம் சுமத்தி உண்மையான பிரச்சனையிலிருந்து விலகி கவலையுற்றுக் கோபப்பட்டு நம் வாழ்வின் பல நல்ல தருணங்களை இழக்கிறோம். இந்த சம்பவத்தில் விரல் என்பது நாம் என்றும், உடலின் மற்ற பாகங்கள் நம்மைச் சுற்றியுள்ளவர்களென்றும் கொண்டால் வாழ்வின் தத்துவம் புரியும்.

**தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே**
**ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே - வள்ளலார்**



உலகின் புகழ்பெற்ற ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் தலைவரின் அலுவலகத்தில் ஒரு தம்பதியர் காத்திருந்தனர். நளினமற்ற உடைகளை அணிந்திருந்த அந்த நாட்டுப்புறத் தம்பதியரைப் பார்த்த தலைவரின் காரியதரிசி, ‘‘தலைவருக்கு இன்று முழுவதும் வேலை இருக்கிறது. அவரைப் பார்ப்பது கடினம்’’ என்று கூறினார்.

“நாங்கள் காத்திருக்கிறோம். அவர் வேலை முடிந்ததும் பார்க்கிறோம்’’ என்று கணவர் கூறினார். காரியதரிசி எரிச்சலடைந்தார். இவர்களை எப்படியாவது தட்டிக் கழிக்கலாம் என்றால் விடமாட்டேன் என்கிறார்களே’’ என்று நினைத்தார்.

இவர்களை உள்ளே விட்டால் தலைவர் தன்னைத் திட்டுவார் என்று அவருக்கு தெரியும். அவர்கள் நாள் முழுதும் காத்திருந்தனர். அப்புறம் அவருக்கு வேறு வழி தெரியவில்லை.

தலைவரிடம் சென்று இந்தத் தம்பதிகளைப் பற்றிக் கூறி, “சிறிது நேரம் பார்த்து விட்டீர்களானால் அவர்கள் போய்விடுவார்கள்’’ என்றார்.

அவர்களது உடைகளையும் தோற்றங்களையும் பற்றிக் கூறியதுமே எரிச்சலடைந்த அவர், வேறு வழியின்றி அவர்களை உள்ளே அனுப்பச் சொன்னார். கடினமான முகத்துடனும் பெருமை மிக்க பாரம்பரியத்துடனும் அவர்களை எதிர்நோக்கினார்.

அவர்கள் உள்ளே வந்ததும் மனைவி, “எங்களது மகன் இந்தப் பல்கலைக்கழகத்தில்தான் படித்தான். இங்கு அவன் சந்தோஷமாக இருந்தான். துரதிர்ஷ்டவசமாக போன வருடம் அவன் ஒரு விபத்தில் இறந்து போய்விட்டான். அவனது நினைவாக இந்த பல்கலைக்கழகத்தில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும் என்பது எங்கள் ஆசை’’ என்று கூறினார்.

ஹார்வார்டின் தலைவர் எரிச்சலுற்றார். “அம்மணி எங்கள் பல்கலைக்கழகத்தில் படித்து இறந்துபோன எல்லோருக்கும் இங்கு சிலை வைக்க முடியாது. இது என்ன கல்லறையென்று நினைத்தீர்களா?’’ என்று கோபத்துடன் கூறினார்.

“இல்லையில்லை’’ என்று மறுத்த மனைவி, “நாங்கள் சிலை வைக்கச் சொல்லவில்லை. எங்களின் மகனின் நினைவாக இந்தப் பல்கலைக்கழகத்துக்கு ஏதாவது ஒரு கட்டிடம் கட்டித்தர ஆசைப்படுகிறோம்’’ என்றார்.

அவர்களின் உடைகளையும் தோற்றங்களையும் கேவலமாகப் பார்த்தத் தலைவர், “கட்டிடமா! ஒரு பல்கலைக்கழகக் கட்டிடம் கட்ட வேண்டுமென்றால் எவ்வளவு செலவாகுமென்று உங்களுக்குத் தெரியுமா? ஹார்வார்டின் மதிப்பென்னவென்று உங்களுக்குத் தெரியுமா? இதன் மதிப்பு இப்பொழுது பத்து மில்லியன் டாலர்கள். என் நேரத்தை வீணாக்காதீர்கள்” என்றார்.

ஒரு நிமிடம் தம்பதியர் மௌனமான இருந்தனர். தலைவர் சிறிது சந்தோஷமடைந்தார். ஒரு வழியாகப் புரிந்துகொண்டார்கள்.

தனது கணவரிடம் திரும்பிய மனைவி, “ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்க இவ்வளவுதான் செலவாகுமா அப்போது நாமே ஏன் ஒரு பல்கலைக்கழகம் தொடங்கக் கூடாது?” என்று கேட்டார். கணவன் மௌனமாக தலையாட்டினார்.

தலைவரின் முகம் குழப்பத்திலும் அதிர்ச்சியிலும் உறைந்திருந்தது.

ஸ்டான்போர்ட் தம்பதியர் மெதுவாக எழுந்து வெளியே சென்றனர்.

ஹார்வார்ட் பல்கலைக்கழகம் அலட்சியம் செய்த தங்கள் மகனின் நினைவாக கலிபோர்னியாவில் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்கள் அந்த எளிய தம்பதியர்.

**உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து**

உருள்கின்ற பெரிய தேர்க்கு அச்சில் இருந்து தாங்கும் சிறிய ஆணி போன்றவர்கள் உலகத்தில் உள்ளனர். அவர்களுடைய உருவின் சிறுமையைக் கண்டு இகழக் கூடாது.

# திசைகளும் தியானப் பலன்களும்

வடக்கு பாகம் நக்ஷத்திர பிரகாசம்.

கிழக்கு பாகம் சந்திரப் பிரகாசம்.

மேற்கு பாகம் சூரியப் பிரகாசம்

தெற்கு பாகம் அக்கினிப் பிரகாசம்

**தியான திசைகளும் பலன்களும்:**

கிழக்கு - போகசித்தியை பெறுவதற்கு.

மேற்கு - சொர்ண சித்தியைப் பெறுவதற்கு.

வடக்கு - சித்த சுத்தியைப் பெறுவதற்கு.

தெற்கு - சாகாக் கலையை பெறுவதற்கு.

வடக்கு கால் பாகம், தெற்கு தலைபாகம். இதனால்தான் தெற்கு ஞானத்தில் சிறந்தது; வடக்கு அஞ்ஞானத்தில் அழுந்தியது என்று கூறக் காரணம். - வசனபாகம்



# நாம் பெறும் புருஷார்த்தம்

**உரைமனம் கடந்த ஒருபெரு வெளிமேல்**
**அரைசு செய்து ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி**

*உரை - வாக்கு.*

*மனம் - எண்ணம்*

*உரைமனம் கடந்த ஒரு பெருவெளி அருட்பெருஞ்ஜோதி.*

*மனத்தால் எண்ணவும், வாக்கால் சொல்லவும் இயலாத, மனவாக்குகளுக்கு எட்டாத பெருவெளி அருட்பெருவெளி. வாக்கும் மனமும் கடந்த ஒரு பெருவெளி. அவ்வெளியில் அரைசு செய்து ஓங்குவது அருட்பெருஞ்ஜோதி. இதனை திருவருட்பாவில் மகாதேவமாலையில்,*

மட்டகன்றநெடுங்காலம் மனத்தால் வாக்கால்
மதித்திடினும் புலம்பிடினும் வாராது என்றே
கட்டகன்றமெய்யறிவோர் கரணம் நீக்கி
கலையகற்றிக் கருவியெலாம் கழற்றி மாயை
விட்டகன்று கருமமல போதம் யாவும்
விடுத்தொழித்து சகசமல வீக்கம் நீக்கிச்
சுட்டகன்று நிற்க அவர்தம்மை முற்றும்
சூழ்ந்து கலந்திடும் சிவமே துரியத் தேவே.

*என்று அருளியுள்ளார். இதன் பொருளை சற்று ஆய்வோம்.*

*யோக நெறியில் உள்ள துன்பத்தை நன்கறிந்தும் யோகியர் அதனை மேற்கொள்வதற்குக் காரணம் யாதாகலாம் என நம் பெருமானார் சிந்திக்கின்றார். பத்தி நெறியில் நிற்கின்ற பெரியோர்களையும் நோக்குகின்றார். அவர்கள் பரம்பொருளின் அருட்பேற்றை மனத்தால் நினைத்து அதன் பெருமைகளையும் அருட்செயல்களையும் வாயால் எடுத்து ஓதி, உளம் கரைந்து உடல் சிலிர்த்துக் கண்ணீர் பெருக்கிக் கதறிப் புலம்புகின்றனர்.*

*இவ்வாறு பலகாலம் முயன்றும் திருவருட்பேறு எய்தாமை கண்டு வருந்திப் புலம்புவதை மெய்மை உணரும் மேலோர் கண்டு அஃது இனி வாராது என்று தெரிந்து யோக நெறியை மேற்கொண்டனர் போலும் எனத் தெளிகின்றார்.*

அவர்களது யோகத்தை தாமும் எண்ணிப் பார்க்கின்றார். யோக உறுப்பாகிய அந்தக் கரணத்தை ஒடுக்கி அதன் செயலை விளக்குகின்றார். இடகலை, பிங்கலை முதலிய கலைகளை நெறிப்படுத்தி அடக்குகின்றார். பொறி புலன்களாகிய புறக்கருவிகளின் வாயில்களை அவிக்கின்றார். அவற்றிற்கு முதற் காரணமாகிய மாயை செய்யும் மயக்கத்தைப் போக்குகின்றார். மனம் நினைத்தலும், வாய் பேசுதலும், உடல் செயல்படுதலுமாகிய வினைகட்கு மூலமாகிய கன்ம மலத்தையும் அக்கன்மங்கள் நல்கும் அறிவையும் விலக்குகின்றார். இக்கன்மமும் மாயையும் உயிரைத் தொடர்தற்குக் காரணம் சகச மலமாகிய ஆணவமே என்று எண்ணி அதனால் உளதாகும் அறியாமை தடிப்பை நீக்கி மெய்ப்பொருளைக் காண்பதற்குரிய தான் என்னும் சுட்டியறியும் அறிவகற்றி நிற்கும் நிலையில் பரம்பொருள் அவரோடு கலந்து நிற்கும் திறத்தை அடிகள் அறிகின்றார்.

ஆக, மனம் வாக்கு கடந்தோரே அருட்பெருஞ்ஜோதி இறைவன் அரசு செய்யும் பெருவெளிக்குள்ளே நுழைய முடியும் என்பது திண்ணம்.

ஆனால், இதன் முதல் படியாகிய ஜெப தபம் செய்தல், பாடிப் பணிதல், பக்தி செய்தல் என்பது அவசியமே. இவை மனத்தின் அழுக்காறுகளை நீக்கி மனதைச் செம்மைப் படுத்தும். முதல் நிலையாகிய இவை மனதைச் செம்மைப்படுத்தவே என்பதை நாம் நன்கு உணர வேண்டும்.

கண்முதல் பொறியால் மனமுதல் கரணக்
கருவினால் பகுதியின் கருவால்
எண்முதல் புருட தரத்தினால் பரத்தால்
இசைக்கும் ஓர் பரம்பர உணர்வால்
விண்முதல் பரையால் பராபர அறிவால்
விளங்குவது அரிதென உணர்ந்தோர்
அண்முதல் தடித்துப் படித்திட ஓங்கும்
அருட்பெருஞ்ஜோதி என் அரசே.

என்றஅருட்பெருஞ்ஜோதி அட்டகப் பாடலும் இதனையே உணர்த்துகின்றது. மனம் அடங்கும் திறத்தினில் ஓரிடத்தே இருந்தறியேன் என்ற திருவருட்பா வரிகளும் இங்கு கருதுதற்குரியது.

**மாயையை நீக்கி வரும் வினையை பாழாக்கி**
**காயத்தை வேறாக்கிக் காண்பதுனை எக்காலம்.**

இஃது பத்ரகிரியாரின் மெய்ஞ்ஞானப் புலம்பல். இவ்விதம் அனைவருமே யோகத்தை வலியுறுத்தும்போது நாம் எவ்விதம் யோகசாதனையைத் தொடங்குவது? இதற்குத்தான் நம் பெருமானார் யோகத்தை ஒழுக்கங்களாக அருளியுள்ளார்கள். இதனை 'நாம் பெறும் புருஷார்த்தம்' என்ற தலைப்பின் கீழ் வசனபாகத்தில் அருளியுள்ளார்கள். அதனை இனி காண்போம்.

*நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு. 1. ஏமசித்தி. 2. சாகாக்கல்வி. 3. தத்துவ நிக்கிரகஞ் செய்தல். 4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல். இவைகளைப் பெறுவதற்கு ஒழுக்கம் நான்கு வகைப்படும்:*

*1. இந்திரிய ஒழுக்கம் 2. கரண ஒழுக்கம். 3. ஜீவ ஒழுக்கம். 4. ஆன்ம ஒழுக்கம்.*

நம் பெருமானாருக்கு முன் தோன்றிய ஞானிகள் நாம் பெறவேண்டிய புருஷார்த்தமாக அறம், பொருள், இன்பம், வீடு என வகுத்தனர். ஆனால், நம் வள்ளல் பெருமானாரோ சுத்த சன்மார்க்கத்தில் நாம் பெறவேண்டிய புருஷார்த்தங்களை மிக ஆழமாக வகுத்தருளியுள்ளார். அதோடல்லாது அதனைப் பெற ஒழுக்க நெறிகளையும் அமைத்தருளியுள்ளார். அவையாவன,

**இந்திரிய ஒழுக்கம்**

*1) கொடிய சொல் செவி புகாது நாதம் முதலிய ஸ்தோத்திரங்களைக் கேட்டல்.*
*2) அசுத்த பரிசமில்லாது தயாவண்ணமாகப் பரிசித்தல்.*
*3) குரூரமாகப் பாராதிருத்தல்.*
*4) உருசி விரும்பாதிருத்தல்.*
*5) சுகந்தம் விரும்பாதிருத்தல்.*
*6) இன்சொல்லாடல்.*
*7) பொய் சொல்லாதிருத்தல்.*
*8) ஜீவஹிம்சை நேரிடுங் காலத்தில் எவ்வித தந்திரத்தினாலாவது தடைசெய்தல்.*
*9) பெரியோர்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்குச் செல்லுதல்.*
*10) ஜீவ உபகார நிமித்தமாய் சாதுக்கள் வாஸஸ் தானங்களிலும், திவ்ய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல்.*
*11) நன்முயற்சியில் கொடுத்தல் எடுத்தலாதி செய்தல்.*
*12) மித ஆகாரஞ் செய்தல். 13) மித போகஞ் செய்தல்*
*14) மலஜலோபாதிகளைக் கிரமமாய் கழித்தல்.*
*15) காலபேதத்தாலும் உஷ்ண ஆபாசத்தாலும் தடை நேர்ந்தால் ஔஷதி வகைகளாலும் பௌதிக மூலங்களாலும், சரபேத*

அஸ்த பரிச தந்திரத்தாலும், மூலாங்கப் பிரணவத்யான சங்கற்பத்தாலும் தடை தவிர்த்துக் கொள்ளல்.

16) (மந்ததரனுக்கு) சுக்கிலத்தை அக்கிரமாதிக் கிரமத்தில் விடாது நிற்றல்.

17) (தீவிரத்தரனுக்கு) எவ்வகையிலும் சுக்கிலம் வெளிப்படாமை நிறுத்தல்.

18) இடைவிடாது கோசத்தைக் கவசத்தால் மறைத்தல்.

19) இதுபோல் உச்சி, மார்பு முதலிய அங்கங்களையும் மறைத்தல்.

20) சஞ்சரிக்குங் காலத்தில் காலில் கவசம் தரித்தல்.

21) அழுக்காடை உடுத்தாதிருத்தல் முதலியன இந்திரிய ஒழுக்கம் ஆகும்.

## கரண ஒழுக்கம்

1) மனதைச் *சிற்சபையின் கண்ணே நிறுத்தல்; அதாவது முதலில் புருவ மத்தியில் நிற்கச் செய்தல்.

2) துர்விஷயத்தைப் பற்றாதிருக்கச் செய்தல்.

3) ஜீவதோஷம் விசாரியாதிருத்தல்.

4) தன்னை மதியாதிருத்தல்

5) இராகாதி நீக்கி இயற்கைச் சத்துவ மயமாதல்

6) பிறர் மீது கோபியாதிருத்தல்.

7) தனது சத்துருக்களாகிய தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது கண்டித்தல் முதலியன கரண ஒழுக்கமாகும்.

## ஜீவ ஒழுக்கம்

ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி எல்லவருந் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுதல் ஜீவ ஒழுக்கம்.

## ஆன்ம ஒழுக்கம்

யானை முதல் எறும்பு ஈறாகத் தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபை யாகவும் அதனுள் பரமான்மாவே பதியாகவும் கொண்டு யாதும் நீக்கமற எவ்விடத்தும் பேத மற்று எல்லாந் தானாக நிற்றல் ஆன்ம ஒழுக்கம். இத்துடன் இடந்தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், ஜெப தபஞ் செய்தல், தெய்வம் பராவல், பிற உயிர்க்கு இரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப்பழகி நிற்றல் வேண்டும்.

இவ்வண்ணம் நின்றால், மேற்குறித்த அரும் புருஷார்த்தம் கைகூடும்.

இதல்லாது மனம் என்பது ஆன்மாவிற்கும் மாயைக்கும் ஏற்பட்ட தொடர்பின் காரணமாகத் தோன்றிய ஒரு தத்துவம். இதனை இறைவனின் திருவருளால் அல்லது அத்தனை சாதாரணமாக அடக்கவோ, கடக்கவோ இயலாது. எனவேதான் நம் பெருமானார் மேற்கண்ட ஒழுக்கங்களை அருளியதோடு நில்லாமல் இறையருளைப் பெறுவதற்கான ஓர் ஒழுக்கத்தையும் அருளியுள்ளார்கள். அதுதான் ஜீவகாருண்ய ஒழுக்கம்.

ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாது செய்யப்படுகின்ற ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியன பிரயோஜனமில்லாத மாயாஜாலச் செய்கைகள் ஆகுமென்பதை நம் பெருமானார் திண்ணமாக அருளியுள்ளார்.

ஆக, எல்லா உயிர்களிடத்திலும் சாதி, சமய, இன, மொழி பேதமின்றி ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் வாழ்ந்து, புலால் மறுத்து, மேற்கண்ட நான்கு ஒழுக்கங்களையும் கடைபிடித்தால் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருளால் அவர் அரைசு செய்து ஓங்கும் அந்த அருட்பெருவெளிக்குள் புகுந்து இன்புற்று வாழலாம்.

திருச்சிற்றம்பலம்

# பிண்டாண்ட கிரகண சித்தாந்தம்

அண்டத்தில் சந்திராதித்த கிரகண தோஷம்போல் இப்பிண்டத்தில் கிரகண தோஷம் யாதெனில்; பிண்ட புருஷனுக்குப் புறமாகிய கரணம் எனும் சந்திரனாகிய தோற்றும் அறிவு இரும்பில் துரிசு ஏறுவதுபோல் விஷயவாசனையில் அழுந்தி ஏகதேசப் பிரகாச விளக்கமுடையதுதான் சந்திர கிரகணம்.

சூரிய கிரகணம் என்பது, அகப்புறமாகிய ஜீவனென்னும் சூரியனாகிய தோற்றுவிக்கும் அறிவு செம்பில் களிம்பு ஏறுவதுபோல் விஷயவாசனை மயமாய் யாதும் தோன்றாது அறிவின்றி நிற்குங்காலம். இஃது மாயாசிருட்டிக்கு இயற்கையானாலும், இரும்பையும் தாமிரத்தையும் பரிசனவேதிகளால் ரவுப்பியாதி ஏமங்கள் செய்வதுபோல், நன்முயற்சியாகிய ஜீவகாருண்ய மயமாய்ப் பரிச்சியஞ் செய்தால் மேற்படி துரிசு நீங்கும். மேலும் ஆசாரியர் அனுக்கிரகத்தாலும் நீங்கும்.

**இது பிண்டாண்ட கிரகண சித்தாந்தம்.**

- திருவருட்பா வசனபாகம்




# எது வளர்ச்சி?

மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை ஒரே பள்ளியில் தொடர்ந்து பதினான்கு வருடங்கள் நீங்கள் படித்து வரும்போது, உங்கள் பள்ளி உங்களுக்கு இரண்டாம் வீடாக ஆகிவிடுகிறது. ஜெய் இந்த வருடம் தன் பள்ளிப் படிப்பை முடித்துவிடுவான். 'பள்ளியை விட்டுச் செல்லும் சிறந்த மாணவன்' என்ற மிகப் பிரபலமான பட்டத்திற்கு அவனுடன் போட்டியிடுவதற்கு வேறு எவரும் இல்லை என்று ஆசிரியர்களில் இருந்து மாணவர்கள் வரை அனைவரும் அறிந்திருந்தனர். பள்ளி ஆண்டு விழா அன்று மாலை நடக்கவிருந்தது. இது ஜெய்க்கு சிறந்த மாலைப் பொழுதாக அமையவிருந்தது.

வாழ்க்கையில் இன்று நாம் யாராக ஆகியிருக்கிறோமோ, அவ்வாறு நாம் ஆகியிருப்பதற்குக் காரணம் நம்மீது நாம் நம்பிக்கை கொள்ளத் துவங்குவதற்கு முன்பே வேறு யாரோ ஒருவர் நம்மீது நம்பிக்கை வைத்ததுதான். ஜெய்யைப் பொறுத்தவரை சாரதிதான் அந்த யாரோ ஒருவர். ஆசிரியருக்கும் மாணவனுக்கும் இடையே ஏற்படும் ஈர்ப்பு ஒரு புதிரான விஷயம்தான். அது எப்போது நிகழும், யாரோடு நிகழும், அது ஏன் நிகழ்கிறது என்று நமக்கு ஒருபோதும் தெரியாது. ஆனால், அது நிகழும்போது அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஜெய்யும் சாரதியும் அப்படிப்பட்ட ஈர்ப்பைப் பகிர்ந்து கொண்டனர். ஆசிரியருக்கும் மாணவனுக்கும் இடையேயான அந்த ஈர்ப்பு இவர்கள் விஷயத்தில் மெய்யானது. சாரதியைக் கண்டறிந்ததில் ஜெய் தன்னைக் கண்டறிந்தான். ஜெய்யிடம் ஏதோ ஒன்று இருந்ததை சாரதி கண்டறிந்ததால், அவர் ஜெய்யோடு சேர்ந்து செயல்படத் துவங்கினார். 'நான் என் ஆசிரியரால் உருவாக்கப்பட்டவன்' என்று ஜெய் அடிக்கடிப் பெருமிதத்துடன் கூறுவதுண்டு.

ஜெய் அன்று மாலையில் வழக்கத்தைவிட சற்று முன்னதாகவே வந்துவிட்டான். ஆசிரியர்களுக்கான அறைகளில் ஒவ்வொன்றாகப் போய் அவன் சாரதியைத் தேடினான். ஒன்பதாவது வகுப்புக் கட்டிடத்தை நெருங்கியபோது சாரதியின் குரல் ஓர் அறையில் இருந்து வருவதை அவன் கவனித்தான். சாரதி தன் பழைய மாணவர்களில் ஒருவனுடன் உரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

அன்றைய மாலைப் பொழுதின் கதாநாயகன் வெளியே காத்துக் கொண்டிருந்தான். ஆனாலும், அவர்களது உரையாடலை அவனால் தெளிவாகக் கேட்க முடிந்தது. அந்தப் பழைய மாணவன் சாரதி முதன்முதலில் கற்றுக் கொடுத்த வகுப்பைச் சேர்ந்தவன். சுமார் இருபதாண்டுகளுக்கு முன் அவன் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டிருந்தான். மண்பாண்டத்திற்குக் காரணமான குயவனுடன் அவன் தன் வெற்றிக் கதையைப் பகிர்ந்து கொண்டபோது கடந்த வருடம் 18 கோடி ரூபாயைத் தான் சம்பாதித்த விதத்தைப் பற்றியும், தனது எதிர்காலத் திட்டங்கள் என்னென்ன என்பது பற்றியும், பள்ளியில் தான் மகிழ்ச்சிகரமாகக் கழித்த அந்த நாட்கள் பற்றியும் அவன் பேசினான். தன் வாழ்க்கையைப் பற்றிய முழுமையான படத்தை அவன் சாரதிக்குக் கொடுக்க முயற்சித்துக் கொண்டிருந்தான். இருபது வருடங்கள் கழித்து சாரதியிடம் தான் எவற்றைப் பகிர்ந்து கொள்ளப் போகிறோம் என்பது பற்றி ஜெய்யின் கற்பனை தறிகெட்டு ஓடியதைக் கூற வேண்டிய தேவையில்லை.

விடைபெற்றுக் கொள்வதற்கு முன் அந்தப் பழைய மாணவன் சாரதியை ஆரத் தழுவினான். ஆசிரியர்களுக்கான அந்த அறைக்குள் ஜெய் நுழைந்தபோது சாரதியின் முகம் பெரிதாக மலர்ந்திருந்தது. உங்களது சொந்த வெற்றியைக் காட்டிலும், உங்களால் உருவாக்கப்பட்டவர்களின் வெற்றி எப்போதுமே உங்கள் மனத்திற்குப் பிரியமானதாக இருக்கும். ஒரு வழியில் பார்த்தால், இன்றைய மாலைப் பொழுது ஜெய்யினுடையது. எப்போதும் விபரங்களைத் தேடும் சாரதி, “உன் ஏற்புரையை நீ தயார் செய்துவிட்டாயா?” என்று கேட்டார். “இந்தக் கேள்வி உங்களிடம் இருந்து வரும் என்று நான் எதிர்பார்த்ததால் நான் என் ஏற்புரையை ஏற்கனவே தயாரித்து வைத்துவிட்டேன்” என்று ஜெய் பதிலளித்தான்.

“சார், நான் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறேன். உங்களுக்கும் உங்கள் பழைய மாணவனுக்கும் இடையே நடந்த உரையாடலை நான் கவனிக்க நேர்ந்தது. நீங்கள் உருவாக்கியுள்ள மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிறப்பாகத் திகழும்போது அது குறித்து உங்களுக்கு என்ன தோன்றுகிறது? நீங்கள் அதை எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்? பாடம் கற்பிப்பது உங்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நான் அறிவேன். ஆனாலும், ‘நான் ஓர் ஆசிரியராகவே இருக்கிறேன். ஆனால், உலகம் முன்னோக்கி நகர்ந்து கொண்டே இருக்கிறது’ போன்ற

எண்ணங்கள் ஏற்படுகின்றனவா? நீங்கள் உருவாக்கியுள்ள தலைவர்கள் அனைவருக்கும் நீங்கள் ஓர் ஏணியாக இருந்திருக்கிறீர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நீங்கள் மட்டும் அதே இடத்தில் இருந்துள்ளதாக உங்களுக்குத் தோன்றுவது இல்லையா? சார், உங்கள் மனத்தில் என்ன எண்ணங்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன என்பது குறித்து எனக்கு சற்றுத் தெளிவுபடுத்த முடியுமா?" என்று ஜெய் கேட்டான்.

இந்த அற்புதமான மாணவனிடம் இருந்து வரும் எதுவொன்றும் சாரதியின் முகத்தில் புன்னகையை அரும்பச் செய்யும். கடிகாரத்தைப் பார்த்தார். குறைந்தது இன்னும் அரைமணி நேரம் இருந்தது. பிறகு ஜெய்யை உட்காரும்படி சொன்ன சாரதி, "**காரணம்** (Cause) எப்போதும் தன்னை **விளைவோடு** (Effect) ஒப்பிடுவதில்லை. பெற்றோர்கள் தங்களுடைய சொந்த வெற்றியைத் தங்கள் பிள்ளைகளின் வெற்றியோடு எதற்காக ஒப்பிடுவார்கள்? ஓர் ஆசிரியர் தன் வாழ்க்கையைத் தன் மாணவனின் வாழ்க்கையோடு எதற்காக ஒப்பிட்டு மதிப்பிடுவார்? தான் உருவாக்கும் பானைகளுக்குக் கிடைக்கும் பாராட்டுகள் ஒரு குயவனை ஏன் பாதிக்கும்? தாங்கள் உருவாக்கும் மரங்கள் தங்கள் வாழ்நாளையும் தாண்டி உயர்ந்து நிற்கும் என்பது தோட்டக்காரர்களுக்குத் தெரியும். ஆசிரியர்கள், குயவர்கள், தோட்டக்காரர்கள் போன்ற அனைவருமே படைப்பாளிகள். தனிப்பட்ட முறையில் என் மாணவர்களுடைய வாழ்க்கையுடன் எனது வாழ்க்கையை ஒப்பிடுவது பற்றிய லேசான எண்ணம்கூட என் மனத்தில் இதுவரை தோன்றியதில்லை. நீ இந்தக் கேள்வியைக் கேட்ட பிறகுதான் இதை அந்தக் கண்ணோட்டத்திலும் பார்க்கலாம் என்பதை நான் உணர்கிறேன். உண்மையில் ஓர் ஆசிரியர் தன்னைத் தன் மாணவனுடன் ஒப்பிடுவது அதர்மம், அவனை உருவாக்குவதுதான் அந்த ஆசிரியரின் தர்மம். ஓர் ஆசிரியர் என்ற முறையில் நான் உருவாக்கிக் கொண்டே இருப்பேன். இருபதாண்டுகளுக்கு முன் நான் அவனை உருவாக்கினேன். இன்று நீ, நாளை அது வேறு யாரேனும் ஒருவராக இருக்கும். ஒரு படைப்பாளி ஒருபோதும் தன்னைத் தன் படைப்புகளுடன் ஒப்பிடுவதில்லை" என்று சாரதி கூறினார்.

பதிலுக்கு ஜெய் புன்னகைத்தான். பிறகு, "அதுதான் உங்கள் பலம். அதனால்தான் இருபது ஆண்டுகளுக்குப்பிறகும் ஒரு மாணவன் உங்களிடம் திரும்பி வந்து தன் வெற்றிக் கதையை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறான்.

உங்களால் உருவாக்கப்படுவதற்கு நான் ஆசீர்வதிக்கப்பட்டு உள்ளதாக உணர்கிறேன். நானும் கோடிக்கணக்கில் சம்பாதித்து உங்களிடம் திரும்பி வந்து என் வெற்றிக் கதையைப் பகிர்ந்து கொள்வேன்'' என்று கூறினான்.

அதற்கு சாரதி, "ஆனால் ஜெய், நீ ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். பணமே நோக்கமாக இருந்தால் அது சரிப்பட்டு வராது, ஆனால், அதுவே ஒரு உப பொருளாக இருக்கும்போது அற்புதமாக விளங்கும். உன் வேலை உனது சுய வெளிப்பாடாக மாறும்போது பணம் ஓர் இயற்கையான உபப் பொருளாக தானே உன்னைத் தேடி வரும். ஆனால், பணம் உனது ஒரே குறியாக இருந்து, வேலை அதற்கான ஒரு வழி என்பதாக இருந்தால், அது சரிபட்டு வராது. பணத்திற்காக மட்டும் வேலை பார்க்கும் மக்கள் வெற்றியை அறிந்திருக்கக்கூடும். ஆனால், அவர்கள் மகிழ்ச்சியுடன் கூடிய வெற்றியை ஒருபோதும் அறிய மாட்டார்கள். படைப்புச் செயல்முறையால் நீ தூண்டப்படும்போது நீ படைக்கும் விஷயங்களுக்காக வாழ்க்கை உனக்குச் செலுத்தும் படைப்புக் கட்டணம்தான் பணம். ஜெய், செழிப்பு என்பது ஒரு மயக்க நிலை. உன்னிடம் கோடிக்கணக்கில் பணம் இருந்தாலும், எப்போதும் நீ வேறு யாரேனும் ஒருவரைவிட ஏழையாகவே இருக்கிறாய். பணம் என்பது வேறு ஒன்றுடன் ஒப்புநோக்கிப் பார்க்கத்தக்க ஒன்றுதான். தன்னிடம் இருப்பவற்றைக் கொண்டு மகிழ்ச்சியாக இருக்க முடியாத ஒருவனால், தன்னிடம் இன்னும் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் அவனால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. எனவே, படைப்பதற்காக வாழ்ந்து காட்டு" என்று தெளிவுபடுத்தினார்.

"நிச்சயமாக சார்'' என்று ஜெய் ஒத்துக் கொண்டான். "ஆனால், ஒரு கடைசி கேள்வி'' என்று கூறினான். இருவரும் கடிகாரத்தைப் பார்த்தனர். சாரதி சரியென்று தலையசைத்தார். "பணம் ஓர் அளவீடு இல்லை என்றால் நான் என் வளர்ச்சியை எவ்வாறு அளவிடுவது?'' என்று கேட்டான்.

"நல்ல கேள்வி'' என்ற சாரதி அதை அங்கீகரித்துவிட்டுப் பின்வருமாறு கூறினார். "உன் வாழ்நாள் முழுவதும் மூன்று கேள்விகளுக்கு நீ பொறுப்பேற்றுக் கொள். அவை

1. நான் என் ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்துகிறேனா?
2. ஒவ்வொரு வருடமும் நான் எத்தனை பேருடைய வாழ்க்கையில் பயனுள்ளவனாக விளங்குகிறேன்?
3. ஒவ்வொரு நாளும் கடவுளை நெருங்கும் விதத்தில் நான் வாழ்கிறேனா?

*முதலில் உன் வாழ்வில் நீ எவ்வளவு சாதனைகளைப் படைத்தாலும் சரி, 'நான் என் ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்துகிறேனா?' என்ற கேள்வியை நீ தொடர்ந்து உன்னிடம் கேட்டுக் கொண்டேயிரு. படைப்பதற்காகப் படைக்கப்பட்டவன்தான் மனிதன். தன் வாழ்க்கையை வடிவமைப்பதற்காக வடிவமைக்கப்பட்டவன்தான் மனிதன். பிறப்பு உட்பட, பெற்றோர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமுதாயத்தினர் நம்மை ஆளாக்குவதற்கு ஏராளமாக முதலீடு செய்துள்ளனர். இதன் விளைவாக தன் ஆற்றலுக்கு மதிப்பளிக்கும் வகையில் ஒரு முழுமையான வாழ்க்கையை வாழ்வதற்கான தார்மீகப் பொறுப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளது.* **மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் நீ எவ்வளவு சாதித்துள்ளாய் என்பதல்ல வெற்றி. உன் திறனுடன் ஒப்பிடுகையில் நீ எவ்வளவு சாதித்துள்ளாய் என்பதுதான் வெற்றி. உன் திறன் என்பது உனக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் அளப்பரிய ஆற்றலால் வரையறுக்கப்படுகிறது."**




*சாரதி தொடர்ந்தார், "'நான் என் ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்துவதை நான் எவ்வாறு அறிந்து கொள்வது?' என்பதுதான் இப்போது கேள்வி. அங்குதான் இரண்டாவது கேள்வி தலைகாட்டுகின்றது. ஒவ்வொரு வருடமும் நான் எத்தனை பேருடைய வாழ்க்கையில் பயனுள்ளவனாக விளங்குகிறேன்? ஒரு மாடு, ஒரு எருது, ஒரு கிளி போன்றவைகூட ஒரு மனிதக் குடும்பத்திற்கு உணவளிக்கிறது. சராசரிக்கும் குறைவான வாழ்க்கையை வாழ்வதும், சுயநலத்துடன் தனக்காக மட்டுமே வாழ்வதும் வெட்கத்திற்குரிய விஷயம். உன் வாழ்க்கை எவ்வளவு பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பதை வைத்து உன் வெற்றியை அளவிடு. நம்மில் ஒருவர்கூடப் பயனற்றவர் அல்ல. நாம் நம்மைக் குறைவாகப் பயன்படுத்திக் கொள்கிறோம் அவ்வளவுதான்."*



"இறுதியாக, நாம் விரும்பும் விளைவுகளைப் பெறுவதற்குக் கொலை செய்தால்கூடப் பரவாயில்லை என்று மக்கள் நம்பும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அது சரியல்ல. நன்னடத்தைக்கும் ஒழுக்கத்திற்கும் பொறுப்பேற்கவில்லை என்றால், நான் முன்பு கூறியதுபோல் வெற்றி சாத்தியப்படக்கூடும் ஆனால், மகிழ்ச்சிகரமான வெற்றி சாத்தியப்படாது.

அர்ச்சுனன் கிருஷ்ணரைத் தேர்ந்தெடுத்தான். துரியோதனன் கிருஷ்ணரின் வளங்களைத் தேர்ந்தெடுத்தான். மீதிக் கதை நாடறிந்த விஷயம்.

யார் வெற்றி பெற்றார்கள் என்று நமக்குத் தெரியும். கடவுளுக்குப் பதிலாக நாம் கடவுளின் சாம்ராஜ்யத்தை நாட வேண்டாம். தாழ்ந்த கொள்கைகளே இத்தகைய விளைவுகளைக் கொடுக்க முடியும் என்றால் உயர்ந்த கொள்கைகள் உன் வாழ்வில் இன்னும் ஏராளமானவற்றை நிச்சயமாகக் கொடுக்கும் என்று நம்பு. எனவே, 'ஒவ்வொரு நாளும் கடவுளை நெருங்கும் விதத்தில் நான் வாழ்கிறேனா?' என்ற மூன்றாவது கேள்வியைக் கேட்காமல் நீ ஒருபோதும் உறங்கச் செல்லாதே. ஜெய், நீ இந்த மூன்று கேள்விகளுக்கும் தகுதியானவனாக இருந்தால் பிற



அனைத்தையும் ஓர் இயற்கையான உப பொருளாக வாழ்க்கை உனக்குக் கொடுக்கும். பணம் அதில் ஒன்று மட்டும்தான். உனக்கு இன்னும் அதிகமாகக் கிடைக்க என் வாழ்த்துக்கள்" என்று சாரதி கூறி முடித்தார்.

திருச்சிற்றம்பலம்

## குரு...

கு என்பது இருள், ரு என்பது அருள். இதனால் கு என்னும் அசுத்த அவத்தையில் (நிலையில்) நின்றோரை ரு என்னும் சுத்த அவத்தையில் (நிலையில்) தான் நின்ற வண்ணம் நிறுத்துகின்றறோர் குரு ஆவார்.

**அறிபவை எல்லாம் அறிவித்து என்னுள்ளே**
**பிறிவற விளங்கும் பெரிய சற்குருவே**



## தேவர் குறளாம்

# திருக்குறள்

அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

*அறவினை, நல்வினை யாதென்று வினவின் அஃது ஒருயிரையும் கொல்லாமையாகும். கொலையாகிய ஒரு தீவினை பிற எல்லாத் தீவினைப் பயனையும் தரும்.*

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

*உண்பதனை பசித்த உயிர்க்குப் பகுத்துக் கொடுத்து உண்டு ஐவகை உயிர்களையும் பாதுகாத்தல் என்பது நூலுடையார் திரட்டின அறங்கள் எல்லாவற்றினும் தலையான அறமாகும்.*

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

*முதற்படியான நல்லறமாவது கொல்லாமையே. அதற்கு அடுத்தபடியாக வாய்மையாம்.*

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

*நல்ல வழி அல்லது நெறி என்று சொல்லப்படுவது யாதெனின் அது எந்த உயிரையும் கொலை செய்யாது காக்கும் நெறிதான்.*

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.


*கொலைத் தொழிலை உடையவராகிய மக்கள் அதன் இழிவை ஆராய்ந்தவரின் பார்வையில் புலைத் தொழிலை உடையவராய் மிகவும் தாழ்ந்த இனத்தவராய் கருதப்படுவர்.*

திருச்சிற்றம்பலம்

*வடலூர் சத்திய ஞானசபையில்...*

**மாதப்பூச ஜோதி தரிசன நாட்கள்**

| | | |
|---|---|---|
| 10.04.2022 | ஞாயிறு | மாதப்பூசம் |
| 07.05.2022 | சனி | மாதப்பூசம் |
| 25.05.2022 | புதன் | தருமசாலை தொடக்க நாள் |



# ஜோதி தியானயாத்திரை

MAY மே 2022




| | |
|---|---|
| 7 | வடலூர் — சென்னை |
| 8 | சென்னை----டெல்லி----ரிஸிகேஷ் |
| 9 | ரிஸிகேஷ் |
| 10 | ரிஸிகேஷ் — குப்தகாசி |
| 11 | குப்தகாசி — கேதார்நாத் |
| 12 | கேதார்நாத் — பத்ரிநாத் |
| 13 | பத்ரிநாத் |
| 14 | பத்ரிநாத் — ஹரித்துவார் |
| 15 | ஹரித்துவார் |
| 16 | ஹரித்துவார்----டெல்லி----சென்னை |








முன் பதிவிற்கு +91 98940 10007
vallalarmission.org



திருவண்ணாமலை, அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை சார்பில் ஒவ்வொரு மாதமும் பூச தினத்தன்று வடலூரில் தருமச்சாலை ரோட்டில் அமைந்துள்ள 'வள்ளலார் வாழ்வியல் மையம்' திருமண மண்டபத்தில், திருவருட்பா இசை நிகழ்வு, சிறப்பு சத்சங்கம் போன்ற பேரின்ப நிகழ்வுகள் நடைபெற உள்ளது.

தொடர்புக்கு. 9894010007

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly March 2022, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2020-2022 Posted at Tiruvannamalai on 16th & 17th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/20-22 (Valid upto 31.12.2022)
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).



அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

**பொள்ளாச்சி மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில்**
**அர்த்தநாரிபாளையத்தில்**

# ஆன்மீக சத்சங்கப் பெருவிழா

**பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்**
- வள்ளலார்



- காலை 9.00 11.00 : அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்
- 11.01 12.30 : சிறப்பு சத்சங்கம்
- 12.31 1.00: ஜோதி வழிபாடு
- 1.00 மணி முதல் பசியாற்றுதல் (ஜீவகாருண்யம்)

தொடர்புக்கு **+91 98940 10007**

இப்பேரின்ப நிகழ்வில் அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு
குருவருளும், திருவருளும் பெற அன்போடு அழைக்கிறோம்.

மார்ச் 20
காலை 9.00
மதியம் 1.00

பொள்ளாச்சியிருந்து பஸ் எண்: **16, 27** (கடைசி பஸ் இரவு **8:20**க்கு)
உடுமலையிருந்து பஸ் எண்: **28, 34** (கடைசி பஸ் இரவு **8:30**க்கு)

இடம்: **சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்,**
**குகை பெருமாள் கோவில் செல்லும் வழி,**
**அர்த்தநாரிபாளையம், பொள்ளாச்சி.**

**அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை, பொள்ளாச்சி.**

குறிப்பு: அன்பர்கள் சனிக்கிழமை இரவே வந்து தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு/திருமதி

TIRUVANNAMALAI - HO - 606601. POSTAGE FEE COLLECTED

Redirect to : அருள்திரு **பாபு சாது**
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 99427 76351

**சந்தா பற்றிய விபரங்களுக்கு +91 98940 10007**